**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**கல்வி உளவியல்**

**பிள்ளை விருத்தி**

திரு.அ.ஜேம்ஸ் மேஷன்,
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




## வளர்ச்சி - Growth

வளர்ச்சி என்பது மனித உடலின் பருமனில் ஏற்படும் மாற்றமாகும். இது அளவு ரீதியானது, கட்புலனானது.
(உதாரணம்) குழந்தையின் உயரம், மண்டை ஓட்டின் விட்டம்.

## விருத்தி - Development

விருத்தி என்பது குழந்தையின் உள்ளார்ந்த ஆற்றல் திறன்களில் ஏற்படும் மாற்றமாகும். இது பண்பு ரீதியானது. கட்புலனாகாதது.
(உதாரணம்) நுண்மதி, மனவெழுச்சி, சமூக விருத்தி, ஆளுமை

**வளர்ச்சி – விருத்தி வேறுபாடு**

| வளர்ச்சி | விருத்தி |
|---|---|
| மனித உடலின் பருமனில் ஏற்படும் மாற்றமாகும் | பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல்களில் ஏற்படும் மாற்றமாகும் |
| இது அளவு ரீதியானது | இது பண்பு ரீதியானது. |
| உடல் நிலை, உடல் பருமன், சொற்களஞ்சியத்தில் மாற்றம் ஏற்படும். | நுண்மதி, மனவெழுச்சி, சமூக விருத்தி, ஆளுமை என்பவற்றில் மாற்றம் ஏற்படும். |
| கட்புலனானது | கட்புலனாகாதது |

**பிள்ளை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.**

1) பரம்பரை (Heredity)
2) சூழல் (Environment)
3) முதிர்ச்சி (Maturity)
4) கற்றல் (Learning)

## பரம்பரை (Heredity)

ஒருவரது உடலியல்புகளும் பண்புக் கூறுகளும் நிறமூர்த்தங்கள், பரம்பரையலகுகள் மூலம் ஒரு சந்ததியிலிருந்து மற்றுமொரு சந்ததிக்கு கடத்தப்படும் செயன்முறையே பரம்பரை எனப்படுகிறது.

கரு உருவாகும் போதே பரம்பரை அலகுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. அதாவது, பரம்பரை என்பது கருவுற்ற முட்டையில் அடங்கியுள்ள எல்லாப் பண்புக் கூறுகளையும் குறிப்பதாகும். ஒரு தாயின் முட்டையும் தந்தையின் விந்தணுவும் ஒன்று சேர்ந்து கரு உருவாகும் போது மனித வாழ்க்கையும் ஆரம்பமாகின்றது.

- கருக்கட்டிய முட்டை பின்னர் பல்வேறு கலங்களாகப் பெருகி உடலங்களாகின்றன.
- ஒவ்வொரு கலத்தின் கருவிலும் நிறமூர்த்தவுருக்கள் (Chromosomes) காணப்படுகின்றன.
- மனித உடலில் ஒவ்வொரு கலத்திலும் அதன் கருவில் 23 சோடிகளில் 46 நிறமூர்த்தங்கள் உள்ளன. இவற்றில் தாயிடமிருந்து 23 உம், தந்தையிடமிருந்து 23 உம் பெறப்படும்.
- இந்த நிறமூர்த்தங்களிலேயே பரம்பரையலகுகள் (Genes) காணப்படுகின்றன. ஒரு நிறமூர்த்தத்தில் ஏறத்தாழ 20000 பரம்பரையலகுகள் காணப்படும். இந்த அலகுகளே பரம்பரையாக இயல்புகளைக் கடத்துவன.
- பிள்ளையின் பால் நிர்ணயம் பால் நிறமூர்த்தத்தினால் தீர்மானிக்கப்படும். ஒரு கலத்தில் காணப்படும் 23 சோடி நிறமூர்த்தங்களுள் ஒரு நிறமூர்த்தமே பாலை நிர்ணயிக்கும். பெண் பால் நிறமூர்த்தம் XX எனவும் ஆண்பால் நிறமூர்த்தம் XY எனவும் குறிப்பிடப்படும்.
- ஒவ்வொரு முட்டையும் விந்தும் ஒரே மாதிரியான பரம்பரையலகுகளைக் கொண்ட நிறமூர்த்தங்களைப் பெறுவதில்லை. இதனாலேயே ஒத்த இரட்டையர் தவிர்ந்த சகோதரர்களுக்கிடையில் வேற்றுமை காணப்படுகின்றது.

## ஒவ்வா இரட்டையர் - இருகருவிரட்டையர் (Fraternal Twins)

இரண்டு சூல்கள் தனித்தனி இரண்டு விந்துக்களால் கருக்கட்டப்படுவதால் தோன்றும் இரட்டையர்கள் ஒவ்வாத இரட்டையர்கள் ஆவர். இவர்கள் வேறுபட்ட நிறமூர்த்த அமைப்புக்களைக் கொண்டவர்களாவர். எனவே தோற்றத்தலும் இயல்புகளிலும் வேறுபட்டுக் காணப்படுவர். அவர்கள் ஒரே பால் அல்லது எதிர்ப்பாலாராக அமைய இடமுண்டு.

## ஒத்த இரட்டையர் - ஒருகருவிரட்டையர் (Identical Twins)

கருக்கட்டிய ஒரு முட்டை பிளவின் போது இரு தனிக் கலங்களாகப் பிரிக்கப்படலாம். இவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு குழந்தை தோன்றலாம். ஒத்த இரட்டையர்பிறக்கம் சந்தர்ப்பத்தில் அவர்கள் சமமானவர்களாகவே காணப்படுவர். ஒரே கருவிலிருந்து அவர்கள் உற்பத்தியானபடியால் இவர்கள் ஒரே தன்மையான நிறமூர்த்தத் தொகுதிகளைக் கொண்டிருப்பர். அதனால் ஒரே பலம்பரை இயல்புகளைக் கொண்டிருப்பர். அவர்கள் ஒரே பாலாகவே இருப்பதுடன் உடலமைப்பு, நுண்மதி, மனவெழுச்சி ஆகிய எல்லாப் பண்புகளிலும் ஒத்திருப்பர். இவர்கள் ஒருகருவிரட்டையர் அல்லது ஒத்த இரட்டையர் என அழைக்கப்படுவர்.

**ஒருவருக்கு பரம்பரையாகக் கிடைக்கும் இயல்புகள்.**

1) கண் நிறம், தலைமயிர் நிறம், குருதி இனம், உடலுறுப்பு வடிவம், போன்ற உடலியல்புகள்.
2) உள விருத்தி குன்றிய பிள்ளைகள் நிறமூர்த்த விகாரம் காரணமாகத் தோன்றுவர்.
3) உளக் கோளாறுடைய பிள்ளைகள் பிறத்தல்.
4) சில நோய்கள் தலைமுறையுரிமையாகக் கிடைத்தல்.
5) நுண்மதி தலைமுறையுரிமையாகக் கிடைக்கிறது.

## சூழல் (Environment)

கருத்தரிப்பு தொடக்கம் குழந்தை பிறந்து மரணிக்கும் வரையில் உயிர்களின் வளர்ச்சியிலும், விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்தும் பௌதீக, சமூக, உள உலகங்களின் ஒட்டு மொத்தமே சூழலாகும்.

ஒருவர் தமது வாழ்க்கையில் முதன் முதலாகச் சந்திக்கும் சூழல் தாயின் கருவறை என கருத்து தெரிவித்தவர் **வுட்வர்த்** ஆவார்.

**ஒருவரின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் சூழல் காரணிகள்.**

**1) அகச் சூழல் காரணிகள் / பிறப்பிற்கு முன்னான சூழல் காரணிகள்.**

- தாயின் வயது.
- தாயின் போசாக்கு.
- தாய் உட்கொள்ளும் மருந்து வகைகள்.
- தாயின் பாதகமான பழக்கங்கள்.
- தாய் கதிரியக்கத்துக்கு ஆளாதல்.
- தாயைப் பீடிக்கும் நோய்கள்.
- தாய் எதிர்கொள்ளும் உள நெருக்கடிகள்.

**2) புறச் சூழல் காரணிகள்.**

- பௌதீகச் சூழல் - உணவு, நீர், வழி, காலநிலை, வாழும் சூழல்.
- சமூகச் சூழல் - குடும்பம், பாடசாலை, சகபாடிகள்.
- உளச் சூழல் - தூண்டியின் படி ஏற்படும் உள நிலைமைகள்.

## முதிர்ச்சி (Maturity)

பரம்பரை அலகுகளால் தீர்மானிக்கப்பட்டு, இயற்கையாகவும் இயல்பாகவும் நிகழும் மாற்றமே முதிர்ச்சியாகும். இது உள்வாரியாக வயதிற்கேற்ப நிகழும் மாற்றமாகும்.
(உதாரணம்) பற்கள் முளைத்தல், தவளுதல், நடத்தல்

- குறித்த வளர்ச்சி ஒழுங்கின்படி உடலில் ஒழுங்கான வளர்ச்சி நிகழும்.
- உள்ளுறுப்புக்கள் சார்ந்த காரணிகள், போசாக்கு, சுகாதார நிலை, சூழலின் பாதகமான செல்வாக்குகள் காரணமாக முதிர்ச்சி பாதிக்கப்படலாம்.
- குறித்த முதிர்ச்சி நிலையை அடையும் வரையில் சில செயற்பாடுகளில் ஒருவரால் ஈடுபட முடியாது.
- கற்றலுக்கு முதிர்ச்சி அவசியமானது. எனினும், கற்றலினால் முதிர்ச்சி ஏற்படுவதில்லை.

**கற்றல் - முதிர்ச்சி வேறுபாடுகள்.**

| முதிர்ச்சி | கற்றல் |
|---|---|
| கற்றலினால் ஏற்படுவதில்லை | முதிர்ச்சி அவசியம் |
| கட்டாயம் நிகழும் | அவ்வாறானதல்ல |
| ஒழுங்கு முறைப்படி வளர்ச்சியடையும் | ஒவ்வொரு குழந்தையும் சமமான கற்றல் அனுபவங்களைப் பெறுவதில்லை |

**கற்றல் (Learning)**

யாதேனும் அனுபவம் காரணமாக நடத்தையில் ஏற்படும் நிரந்தரமான மாற்றம் கற்றல் எனப்படுகிறது. இது முதிர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையது.

**ஆயத்தம் (Readiness)**

யாதேனும் புதிய அனுபவங்களைப் பெறுவதற்காக அதற்குத் தேவையான உடல், உள தயார்ப்படுத்துதலே ஆயத்தம் என்பதாகும். இத்தகைய ஆயத்த நிலையை அடைந்த பின்னரே கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர் ஈடுபட வேண்டும். இல்லையேல் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்.

1. கற்றல் தொடர்பான பாதகமான மனப்பாங்கு உருவாதல்.
2. பிள்ளை அதிக களைப்புக்கு ஆளாதல்.
3. ஆசிரியர் அதிகமாக பிரயாசைப்பட வேண்டியேற்படும்.
4. கற்றலின் பால் கவனத்தை ஈர்த்துக் கொள்ள முடியாமை.
5. பிள்ளை பொருத்தமற்ற நடத்தைக் கோலங்களைக் காட்டுதல்.


**பிள்ளை விருத்திக் கோட்பாடுகள்.**

1. பிள்ளை விருத்திக் கோலத்தின் ஒழுங்குமுறை எந்தப் பிள்ளை தொடர்பாகவும் ஒரு சீரானதாகும்.
2. பிள்ளை விருத்தி தொடர்ச்சியான ஒரு செயன்முறையாகும்.
3. பிள்ளை விருத்தியின் தொடக்கக் கட்டத்தில் தெறிவினைகளே காணப்படும்.
4. தனியாளின் விருத்தியில் அவர் வாழும் சூழல் செல்வாக்குச் செலுத்தும்.
5. பிள்ளை விருத்தியில் தீர்க்கமான (Critical) பருவங்கள் உள்ளன.
6. விருத்தியானது பொதுவான துலங்கல்கள் தொடக்கம் விசேடமான துலங்கல்கள் வரை செல்லும்.

**பிள்ளை விருத்தியின் அடிப்படையான அம்சங்கள்.**

1. உடல் விருத்தி (Physical Development)
2. அறிவாற்றல் விருத்தி (Cognitive Development)
3. மனவெழுச்சி விருத்தி. (Emotional Development)
4. சமூக விருத்தி. (Social Development)
5. ஒழுக்க விருத்தி. (Moral Development)







**பிள்ளை விருத்திப் பருவம்**

கருத்தரிப்பு தொடக்கம் யௌவனப் பருவம் வரையிலான பருவம் பிள்ளை விருத்திப் பருவம் எனப்படுகிறது.

**தனியாள் விருத்திப் பருவங்கள் / பிள்ளை விருத்திப் பருவங்கள்.**

1. பிரசவத்துக்கு முந்திய பருவம் (கருத்தரிப்பு தொடக்கம் பிறப்பு வரை)
2. குழந்தைப் பருவம் (பிறப்பு தொடக்கம் 2 வயது வரை)
3. முன் பிள்ளைப் பருவம் (2 வயது தொடக்கம் 7 வயது வரை)
4. பின் பிள்ளைப் பருவம் (7 வயது தொடக்கம் 11 வயது வரை)
5. கட்டிளமைப் பருவம் (11 வயது தொடக்கம் 17/18 வயது வரை)






**பிரசவத்துக்கு முந்திய பருவத்தின் மூன்று உப பருவங்கள்.**

1. **நுகப் பருவம்:** கருக் கட்டல் தொடக்கம், கருக்கட்டிய சூல் பலோப்பியன் குழாயின் வழியே சென்று கருப்பைச் சுவரில் பதிக்கப்படுவது வரையிலான காலப்பகுதி.
2. **முளையப் பருவம்:** நுகம் கருப்பைச் சுவருடன் இணைந்து ஏறத்தாள 8 வார காலம் வரையிலான காலம் இதுவாகும்.
3. **முதிர் மூலவுருப் பருவம்:** கருத்தரித்து மூன்று மாதம் தொடக்கம் பிறப்பு வரையிலான காலப்பகுதி இதுவாகும்.

## பச்சிளம் பருவம் (Neonatal Period)

குழந்தை பிறந்து 3 – 4 வாரங்கள் வரையான காலம் இதுவாகும்.


### தெறிவினை

சிறப்பான தூண்டிகளுக்காகக் காட்டப்படும் இச்சையின்றிய தன்னிச்சையான உடற் செயற்பாடுகள் தெறிவினையாகும். சில உதாரணங்கள்:-

1. தலையைத் திருப்புதல்.
2. சூப்புதல்.
3. விழுங்குதல்.
4. பற்றுதல் / பிடித்தல்.
5. சத்தம் கேட்டு திடுக்கிடுதல் - மொரோ தெறிவினை.
6. உள்ளங்காலைத் தடவும் போது கால் விரலை விரித்து வளைத்துக் கொள்ளல் - பவின்ஸ்கி தெறிவினை


### குழந்தைப் பருவ இயல்புகள்.

- ❖ கண்களால் காண்பவற்றை மாத்திரம் நினைவில் வைத்திருப்பர்.
- ❖ 4 மாதத்திலிருந்து நினைவாற்றல் வளர்ச்சியடையும்.
- ❖ 6 மாதமடையும் போது ஞாபகமும் விளக்கமும் விருத்தியடையும்.
- ❖ ஒளித்து வைத்த பொருளை பிள்ளை தேடத் தொடங்கும்.
- ❖ பொருளின் நிரந்தரத் தன்மை பற்றிய உணர்வு பிள்ளையிடத்தே விருத்தியடையும்.




**Child Development Milestone Chart**

| Age | Physical Development | Social and Emotional Development | Intellectual Development | Language Development |
|---|---|---|---|---|
| At Birth | Lies in fetal position with knees tucked up. Unable to raise head. Head falls backwards if pulled to sit. Reacts to sudden sound. Closes eye to bright light. Opens eye when held in an upright position. | Bonds with mother. Smiles at mother. | Beginning to develop concepts e.g. becomes aware of physical sensations such as hunger. Explores using his senses. Make eye contact and cry to indicate need. | Cries vigorously. Respond to high-pitched tones by moving his limbs. |
| 3 Months | Pelvis is flat when lying down. Lower back is still weak. Back and neck firm when held sitting. Grasps objects placed in hands. Turns head round to have a look at objects. Establishes eye contact. | Squeals with pleasure appropriately. Reacts with pleasure to familiar routines. Discriminates smile. | Takes increasing interest in his surroundings. Shows interest in playthings. Understand cause and effect… e.g. if you tie one end of a ribbon to his toe and the other to a mobile, he will learn to move the mobile. | Attentive to sounds made by your voice. Indicates needs with differentiated cries. Beginning to vocalize. Smile in response to speech. |
| 6 Months | Can lift head and shoulders. Sits up with support. Enjoys standing and jumping. Transfers objects from one hand to the other. Pulls self up to sit and sits erect with supports. Rolls over prone to supine. Palmer grasp of cube. Well established visual sense. | Responds to different tones of mother. May show 'stranger shyness'. Takes stuff to mouth. | Finds feet interesting. Understand objects and know what to expect of them. Understand 'up' and 'down' and make appropriate gestures, such as raising his arms to be picked. | Double syllable sounds such as 'mama' and 'dada'. Laughs in play. Screams with annoyance. |
| 9 Months | Sits unsupported. Grasps with thumb and index finger. Releases toys by dropping. Wiggles and crawls. Sits unsupported. Picks up objects with pincer grasp. Looks for fallen objects. Holds bottle. Is visually attentive. | Apprehensive about strangers. Imitates hand-clapping. Clings to familiar adults. | Shows interest in picture books. Watches activities of others with interest. | Babbles tunefully. Vocalizes to attract attention. Enjoy communicating with sounds. |
| 1 Year | Stands holding furniture. Stands alone for a second or two, then | Cooperates with dressing. Waves goodbye. | Responds to simple instructions. Uses trial-and-error to learn about | Babbles 2 or 3 words repeatedly. Responds to simple instructions. |



## முன் பிள்ளைப் பருவ இயல்புகள்.

- நடக்கும் திறன் வளர்ச்சியடையும்.
- இயக்கத் திறன்கள் வளர்ச்சியடையும்.
- எழுதுதல் செயற்பாட்டிற்கான ஆயத்தத்தைப் பெறுவர்.
- பிஜாஜேயின் தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தை ஒத்தது.
- பிள்ளைகளின் உளச் செயற்பாடுகள் நெருக்கமான அனுபவங்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கும்.
- உண்மையானவற்றையும் - கற்பனையானவற்றையும் வேறுபடுத்தும் ஆற்றல் இராது.
- பொருளின் ஓர் அம்சம் தொடர்பாக மாத்திரம் கவனஞ் செலுத்துவர்.
- இப் பருவ பிள்ளைகளின் சிந்தனை தர்க்க ரீதியானது அல்ல.
- செயலொன்று தொடர்பாக பின்னோக்கிச் சிந்திக்க முடியாது.
- மொழி விருத்தி விரைவாக நிகழும்.
- பிள்ளைகள் சமூகமயமாக முயற்சி செய்வர்.
- தண்டனையைத் தவிர்க்கவும் பரிசு பெறவும் முனைவர்.
- சுயாதீனமாக செயற்பட முனைவர்.
- பெற்றோரிடத்தே நெருக்கமான பிணைப்பு மற்றும் தங்கியிருத்தல் போன்றவை குறைவடையத் தொடங்கும்.



**பின் பிள்ளைப் பருவ இயல்புகள்.**

- எண்கள், பகுத்தல், காரணகாரியத் தொடர்பு, நிகழ்தகவு, நேரம், வேகம் போன்ற எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கம் விருத்தியடையும்.
- படங்களை, பொருட்களை ஏதேனும் கோட்பாட்டின் அடிப்படையில் வகையாக, வரிசையாக வேறுபடுத்தும் திறன் காணப்படும்.
- காப்புத் திறன் விருத்தியடையும்.
- அறிவாற்றல் விருத்தி துரிதமாக ஏற்படும்.
- பிரச்சினை தீர்க்கும் திறன் படிப்படியாக விருத்தியடையும்.
- சுயாதீனமாகச் சிந்திப்பர்.
- தேர்ந்து கவனஞ் செலுத்துதல், ஞாபக சக்தி வளர்ச்சியடையும்.
- பிஜாஜேயின் தூல சிந்தனைப் பருவத்தை ஒத்தது.
- புலன் ஞாபகம், நீண்டகால – குறுகியகால ஞாபகம் விருத்தியடையும்.
- மொழி வளர்ச்சி துரிதமாக நிகழும்.
- சொற்களை சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமாக பயன்படுத்துவர்.
- சுயாதீனம் பெற முயற்சிப்பர்.
- பிள்ளைகள் தமது பாலியல் வகிபாகத்தை விளங்கிச் செயற்படத் தொடங்குவர்.
- விளையாட்டு, உற்பத்திச் செயன்முறை ஆகியவற்றில் பங்கு கொள்ள ஆர்வம் காட்டுவர்.

**Erik Erikson's Psycho-Social Stages of Development**

Erikson's eight stages of psychosocial development behaviors that may be associated with healthy and unhealthy expressions of the self's development and ego boundary growth during Erikson's first five development and ego boundary growth during Erikson's first five psychosocial stages.

**Infancy** (1st year) — **Trust vs. Mistrust**
If needs are met, infant develops a sense of basic trust

| Outward signs of Healthy Growth<br>I. Expressions of Trust | Outward signs of Unhealthy Growth<br>I. Expressions of Mistrust |
|---|---|
| 1. invests in relationships | 1. avoids relationship |
| 2. open, non-suspicious attitudes | 2. suspicious, closed, guarded |
| 3. lets mother go | 3. unwilling to let moth go |
| 4. welcomes touching | 4. loner and unhappy |
| 5. good eye contact | 5. poor eye contact |
| 6. shares self and possessions | 6. does not share self or possessions |

**Toddler** (2nd year) — **Autonomy vs. Shame and doubt**
Toddler strives to learn independence and self-confidence

| II. Expressions of autonomy | II. Expressions of shame and doubt |
|---|---|
| 1. independent | 1. procrastinates frequently |
| 2. not easily led | 2. has trouble working alone |
| 3. resists being dominate | 3. need structure and directions |
| 4. able to stand on own two feet | 4. has trouble making decisions |
| 5. works well alone or with others | 5. is easily influenced |
| 6. assertive when necessary | 6. Embarrassed when complimented |

**Preschooler** (3-5 years) — **Initiative vs. Guilt**
Preschooler learns to initiate tasks and grapples with self-control

| III. Expressions of initiative | III. Expressions of guilt |
|---|---|
| 1. is a self-starter | 1. gets depressed easily |
| 2. accepts challenges | 2. puts self down |
| 3. assumes leadership roles | 3. slumped posture |
| 4. sets goals- goes after them | 4. poor eye contact |
| 5. moves easily, freely with body | 5. has low energy level |

**Elementary School** (6 years to puberty) — **Competency vs. Inferiority**
Child leans either to feel effective or inadequate

| IV. Expressions of industry | IV. Expressions of inferiority |
|---|---|
| 1. wonders how things work | 1. timid, somewhat withdrawn |
| 2. finishes what starts | 2. overly obedient |
| 3. likes 'projects' | 3. procrastinates often |
| 4. enjoys learning | 4. an observer, not a producer |
| 5. like to experiment | 5. questions own ability |

**Adolescence** (teen years) — **Identity vs. Role confusion**
Teenager works at developing a sense of self by testing roles, then integrating them to form a single identity.

| V. Expressions of identity | V. Expressions of identity confusion |
|---|---|
| 1. certain about sex role identity | 1. doubts about sex role identity |
| 2. active interest in opposite sex | 2. lacks confidence |

**கட்டிளமைப் பருவ இயல்புகள்.**

- உடல் ரீதியான மாற்றங்களையும், நடத்தை ரீதியான மாற்றங்களையும் கூட்டாகக் கொண்ட பருவம்.
- உயரம் அதிகரித்தல், உடல் பருத்தல், குரல் வேறுபடுதல், அரும்பு மீசை முளைத்தல், உடலியல் உரோமம் வளர்தல், பாலியல் வளர்ச்சி போன்ற இயல்புகள் ஆண் - பெண் இருவரிலும் ஏற்படும்.
- தமது உடல் தொடர்பில் அதிக கவனஞ் செலுத்துவர்.
- உடல் மாற்றங்களுடன் அறிவாற்றல், மனவெழுச்சி, சமூக விருத்தி போன்றனவும் விருத்தியடையும்.
- ஏனையோர்களால் கணிப்பு வழங்கப்படுதல், அன்பு செலுத்தப்படுதல், அன்பு செலுத்தல், கௌரவம் பெறுதல், கணிப்பு பெறுதல், யாதேனுமொன்றைச் செய்யும் ஆசை, புதியன படைத்தல், தலைமைத்துவமேற்றல் போன்ற உளத் தேவைகளைக் காட்டுவர்.
- பழகும் நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.
- சமூகமயமாதல் தன்மை விருத்தியடையும்.
- சங்கங்கள், அமைப்புக்களுடன் தொடர்பைப் பேண விரும்புவர்.
- எதிர்ப்பாலாருடன் சேர்ந்து செயற்படுவதில் விருப்புக் காட்டுவர்.
- மகிழ்ச்சி, அச்சம், கவலை, சினம், அன்பு போன்ற மனவெழுச்சி நிலைமைகளை வெளிக்காட்டுவர்.
- தர்க்க சிந்தனையில் முனைப்புக் காட்டுவர்.
- கருத்து நிலையில் சிந்திக்கும் ஆற்றல் கிடைக்கும்.
- பிஜேஜேயின் நியம சிந்தனைப் பருவத்துக்கு ஒத்த பருவமாகும்.
- அறிவாற்றல் விருத்தியின் உச்ச நிலையை அடைவர்.
- முயன்று தவறுதல் என்பதிலிருந்து விலகி பிரச்சினை தீர்க்கும் ஆற்றலைப் பெறுவர்.
- கவர்ச்சிகள், உணர்ச்சிகள், விழுமியங்கள் போன்ற மாற்றங்களுக்கு உள்ளாவர்.
- இது பிரச்சினைகள் நிரம்பிய புயல் வீசுகின்ற ஒரு பருவமாகும்.




நன்றி.......